Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| | |
|---|---|
| Regd. No. TN / CC (S) DN / 119 / 09-11 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 09-11 |

வேணு : 15 மே 2010 கானம் : 10



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

Related Websites : www.namadwaar.org
Email:contact@namadwaar.org

NO FAME
NO SELF INTEREST
ONLY GOD
NO NAME


ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

| வேணு : 15 | மே 2010 | கானம் : 10 |
|---|---|---|

ஸ்டார் விஜய் டி.வி. ஆறாம் வருட பக்தி திருவிழா துவக்கம் - சென்னை நாரதகானசபா - ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் துவக்கி வைத்து அருளுரை - ஏப்ரல் 5, 2010, சென்னை நாரத கான சபா



மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஏகாதசி பூஜையின்பொழுது ஏப்ரல் 24, 2010



ஸ்டார் விஜய் டி.வி.யின் Channel Head ஸ்ரீஸ்ரீராம் அவர்களுடன் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் - ஏப்ரல் 5, 2010 - பக்தி திருவிழா துவக்கம்



மதுரபுரி ஜெயஹனுமான் கோவிலில் லக்ஷதீபம் - ஏப்ரல் 14, 2010






8/4/2010 - கீழே - தூத்துக்குடி மஹாமந்திர கூட்டுபிரார்த்தனையின் பொழுது. வலது - தூத்துக்குடியில் புதிய நாமத்வாருக்காக அடிக்கல் நாட்டுகிறார்கள் ஸ்ரீஸ்வாமிஜி



திருச்சி நாமத்வாரில் ஸ்ரீஸ்வாமிஜி 8/4/2010





பெங்களூர் ராமமூர்த்தி நகர் சுந்தர ஆஞ்சநேயர் கும்பாபிஷேக இரண்டாம் வருட பூர்த்தி - ஆஞ்சநேயர் புறப்பாட்டில் - மார்ச் 31 -ஏப்ரல் 3 . 2010



கோவிந்தபுரம் ஏப்ரல் 15-21, 2010



ஸ்ரீஸ்ரீ அவர்களுக்கு பாகவதோத்தமர்கள் ப்ருதாவளி கூற குங்கும பூவால் அபிஷேகம் செய்யப்பட்டது

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:15 மே 2010 கானம்:10

உள்ளே ...


| | | | |
|---|---|---|---|
| கீர்த்தனம் | 02 | பாகவத பழம் -2ம்பாகம்- 2 | 12 |
| மதுரமான மஹனீயர் - 170 | 03 | மொட்டை | 21 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 07 | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | 30 |
| கோவிந்தபுரம் சைதன்ய குடீரத்தில் சத்சங்கம்..... | 09 | மாலே மணிவண்ணா - 84 | 32 |


**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

ஸ்ருத்வா தர்மானஸேஷேண பாவநானி ச ஸர்வஶ:
யுதிஷ்டிர: சாந்தநவம் புனரேவாப்யபாஷத

**விஷ்ணு சஹஸ்ர நாமத்திற்கு முன்பு மஹாபாரதத்தில் வரும் இந்த சுலோகத்திற்கு சங்கரபகவத்பாதர் உரை எழுதுகையில், "எல்லா தர்மங்களையும் கேட்டு விட்ட பிறகும், தர்மபுத்திரரான யுதிஷ்டிரர், பீஷ்மரிடம் ஒரு தர்மத்தை யாசிக்கிறார். அது எல்லா நன்மைகளையும் தரக்கூடியதாக இருக்க வேண்டும். எளிதில் ஸாதிக்கவல்லதாக இருக்க வேண்டும். அல்பமான (சிறிதளவு) முயற்சி செய்தபோதிலும், மிகப்பெரிய பலனை அளிக்க வல்லதாக இருக்க வேண்டும். அப்படி ஒரு தர்மம் பற்றி கூறவில்லையே என்று எண்ணி மீண்டும் பீஷ்மரிடம் அது பற்றி வினவினார்" என்று கூறுகிறார் சங்கரர். அப்படிப்பட்ட தர்மம் நாமசங்கீர்த்தனமே என்பதற்காகத்தான் பீஷ்மர் மேற்கொண்டு சஹஸ்ரநாமத்தை உபதேசிக்கிறார்.**



## ஸ்ரீஅம்மாளு அம்மாவின் கீர்த்தனம்

*ராகம்: யமுனா கல்யாணி* *தாளம்: ஆதி*

பல்லவி

நம்பிதவரிகே கேடில்லா
நம்பிதவரிகே பயவில்லா (நம்பித)

அனுபல்லவி

அம்புஜநாப ஆனந்தஸ்வரூப
அயோத்யராமா யென்னுத்தா (நம்பித)

சரணங்கள்

பக்தர யென்னுஹிந்தே திரிகிருவா
பக்தர கூடலே திரிகிருவா
பக்தரிகே பந்த ஆபத்துக்களா
பரிகாரன்ன மாடிருவா (நம்பித)

முரளீதரனாகே இருவ
கொளஹலினல் ஆடிருவ
தரள கோபியர கூடி
கோலாட்டவனே ஆடிருவ (நம்பித)

பக்தர ஆதினா அவனு
பக்தர நுடியே நடியுவனு
பக்த வத்ஸல அம்மாளுப்ரிய
ப்ரகடன வாகியே நெலயுவனு (நம்பித)

## மதுரமான மஹனீயர் - 170

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

பாரத பூமி பவித்ரமானது. இந்த நாட்டில் உள்ள நீர், காற்று, மண், செடி, கொடி, மரம் எல்லாமே பவித்ரமானவை. மத்ஸ்ய, கூர்ம, வராஹத்திலிருந்து ஆரம்பித்து, வரக்கூடிய கல்கி அவதாரம் வரை, இந்த தேசத்தில்தான் ஏற்பட போகின்றது. புராண காலத்தில் இருந்த அகத்தியர், பிருகு, வசிஷ்டர், விஸ்வாமித்திரர், சுகர், சனகரிலிருந்து ஆரம்பித்து, சரித்திர காலத்தில் வாழ்ந்த ஆழ்வார்கள், நாயன்மார்கள், ஆதி சங்கரர், ராமானுஜர், மத்வர், மீரா, பண்டரீ பக்தர்கள், சைதன்யர், ஸ்ரீவல்லபர், சித்தர்கள், ராமக்ருஷ்ணர், வள்ளலார், ரமணர், சேஷாத்திரி ஸ்வாமிகள் என்று சொல்லிக்கொண்டே போகலாம்.



இந்த மஹான்கள் கண்ட உண்மை ஒன்றுதான். ஆனால், அந்த உண்மையை அடைய, அவர்கள் சென்ற பாதைகள் பல. அந்த பாதைகளில் அவர்கள் செல்லும்பொழுது, இது ஒன்றுதான் வழி என்பது போன்ற ஈடுபாட்டுடன் சென்றதுதான், அவர்கள் அடைந்த அனுபூதிக்கு காரணமாயிற்று.

பகவானிடம் ஞானம் இருக்கின்றது. அந்த ஞானம் ஆதிசங்கரர், க்ருஷ்ணாஜி (J.கிருஷ்ணமூர்த்திஜி), ரமணர், புத்தர் போன்றவர்களிடம், அவர் அவர்களுடைய அனுபவத்திற்கு தக்கபடி

*90 ஆண்டுகளுக்கு மேலாக அன்னமே இல்லாமல் வாழ்ந்துள்ளார். தனது இறுதி வாழ்நாள் வரை பணத்தை கையால் தொட்டதே இல்லை. குழந்தை போன்று கள்ளம், கபடம் இல்லாமல் இருப்பார். எளிமையான வாழ்க்கை; கன்னட மொழியில் சுமார் நாற்பதாயிரம் பாடல்களுக்கு மேலாக எழுதியுள்ளார்.*



வெளிப்படுகின்றது. பகவானிடம் காவ்ய ஞானம் உள்ளது. அது வியாசர், வல்லபர், ஸ்ரீதரர், வால்மீகி, பராசரர் போன்ற மஹான்களிடம் வெளிப்பட்டது. பகவானுடைய யோக மஹிமைகள், சித்த புருஷர்கள், ஷீரடி பாபா, யோகிராம்சுரத்குமார், ஞானானந்தர் போன்றவர்களிடம் வெளிப்பட்டது. புரந்தரதாசர், தியாகராஜர், பத்ராசலம் ராமதாசர், ஜெயதேவர் ஆகியோரிடம் பகவானின் கீர்த்தன பிரபாவமும், சங்கீத ஞானமும் வெளிப்பட்டது. அதுபோல் நம்காலத்தில் கும்பகோணத்தில் அம்மாளு அம்மா என்றொரு பக்தை வாழ்ந்து வந்தார். இளம் வயதிலேயே, அந்த கால முறைப்படி அவருக்கு கல்யாணம் நடந்தது. தெய்வாம்சத்துடன் பிறப்பவர்களை தெய்வாம்சம் இல்லாதவர்கள், கல்யாணம் செய்துகொண்டால், அவர்கள் இறந்து விடுவார்கள் என்ற நியதிப்படி அம்மாளு அம்மாவும் பால்ய விதவையானார்கள்.

அவர் தாயாரும், அவருடன் இருந்து வந்தார்கள். சிறுமியான அம்மாளு அம்மாவிற்கு, ஏதோ தாங்க முடியாத துக்கம். இனி இந்த உலகில் நாம் எப்படி வாழப்போகின்றோம் என்ற கவலை, அவருக்கு

*பகவானிடம் ஞானம் இருக்கின்றது. அந்த ஞானம் ஆதிசங்கரர், க்ருஷ்ணாஜி, ரமணர், புத்தர் போன்றவர்களிடம் அவர் அவர்களுடைய அனுபவத்திற்கு தக்கபடி வெளிப்படுகின்றது. பகவானிடம் காவ்ய ஞானம் உள்ளது. அது வியாசர், வல்லபர், ஸ்ரீதரர், வால்மீகி, பராசரர் போன்ற மஹான்களிடம் வெளிப்பட்டது. பகவானுடைய யோக மஹிமைகள் சித்த புருஷர்கள், ஷீரடி பாபா, யோகிராம்சுரத்குமார், ஞானானந்தர் போன்றவர்களிடம் வெளிப்பட்டது. புரந்தரதாசர், தியாகராஜர், பத்ராசலம் ராமதாசர், ஜெயதேவர் அவர்களிடம் பகவானின் கீர்த்தன பிரபாவமும் சங்கீத ஞானமும் வெளிப்பட்டது.*

விஸ்வரூபம் எடுத்தது. செய்வதறியாது, தன் வீட்டின் எதிரே உள்ள ஒரு குளத்தின் அருகே சென்றார். இந்த குளத்தில் விழுந்து உயிரை விட்டு விடலாமா என்ற எண்ணம் மேலோங்கி வளர்ந்தது. அப்படி ஒரு முடிவெடுக்கும் முன், பரிக்கல் நரசிம்மன் அம்மாளுவிற்கு பிரத்யக்ஷமானார். "கவலைப்படவேண்டாம்" என்று அபயம் அளித்தார். "உனக்கு இனி பசியே எடுக்காது. உணவு உட்கொள்ளாமலேயே வாழ்வாய்" என்றும், "வஸ்திரத்திற்கு என் அருளால் என்றும் பஞ்சம் இருக்காது" என்றும் கூறி மறைந்தார்.

அன்று முதல் கடைசி நாள் வரை, அவர் அன்னம் உண்பதே இல்லை. சுமார் 90 ஆண்டுகளுக்கு மேலாக அன்னமே இல்லாமல் வாழ்ந்துள்ளார். தனது இறுதி வாழ்நாள் வரை, பணத்தை கையால் தொட்டதே இல்லை. குழந்தை போன்று கள்ளம், கபடம் இல்லாமல் இருப்பார். தான் பூஜை செய்து வரும் பாண்டுரங்கனுக்கு, விதம் விதமான அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், பூஜை, கீர்த்தனம், நாட்யம் என்று தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து வந்தார். எளிமையான வாழ்க்கை; கன்னட மொழியில், சுமார் நாற்பதாயிரம் பாடல்களுக்கு மேலாக எழுதியுள்ளார். நாற்பது வருடங்கள் தொடர்ந்து அவருடைய வீட்டில் நித்ய பஜனை செய்துள்ளார். காஞ்சி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் விசேஷ க்ருபைக்கு பாத்திரமானவர்.

நம் பிரேமிக வரதன் மீதும், பிரேமிக ஸ்ரீனிவாசன் மீதும், மதுரபுரி கல்யாண ஸ்ரீனிவாசர் மீதும் பாடல்கள் அவருக்கு தானாக வந்துள்ளது. அமரேந்திரபுரம் என்ற இடத்தில், அவரால் கண்டெடுக்கப்பட்ட, அதிஷ்டானம் மற்றும் சிவன், பெருமாள் சன்னதிகள் நமது ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின்

*அட்டைப்படத்தில்: கும்பகோணம் ஸ்ரீ அம்மாளு அம்மாவின் இல்லத்தில் அவருடன் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள்;*
*பின்பக்கம் – ஸ்ரீ அம்மாளு அம்மா அவர் பூஜித்த பாண்டுரங்கனுடன்*






முயற்சியால், திருப்பணி செய்யப்பட்டது. அவருடைய கீர்த்தனங்கள் தெய்வ சக்தியால் தானாக வந்தவை. அவைகளில் பல ரகசியங்களும், ரஸங்களும் பொதிந்துள்ளன. பண்டரிபுரம் பாண்டுரங்கன் சன்னதியிலேயே, வருஷக்கணக்காக தங்கி, பாண்டுரங்கனுக்கு நேராகவே கைங்கர்யம் செய்து வந்துள்ளார். அம்மாளு அம்மாள் நம்மை விட்டு பிரிந்து மார்ச் 30ம் தேதி அன்று, ஸ்ரீவைகுண்டம் சென்று விட்டார்கள்.



*அம்மாளுவை பிரிந்து வருத்தப்படும் நம் எல்லோரையும் காட்டிலும், அந்த பாண்டுரங்கன்தான், அதிக வருத்தமாகியுள்ளான். ஏன் என்றால் அவனை அப்படி கொஞ்சி குலாவுவதற்கு யார் உள்ளார்கள்?*

*தான் பூஜை செய்து வரும் பாண்டுரங்கனுக்கு விதம் விதமான அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், பூஜை, கீர்த்தனம், நாட்யம் என்று தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து வந்தார்.*

ஏப்ரல் 4ம்தேதியன்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ப்ரேமிக பவனத்தில் அம்மாளு அம்மாவப்பற்றி உருக்கமாய் பேசினார். அதிலிருந்து சில விஷயங்களைதான் நாம் இங்கு பார்த்தோம்.



## பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

**கேள்வி: தமிழ்நாட்டில் ஆதியிலிருந்தே, விலங்குகளை பலியிடும் பழக்கம் இருந்து வந்திருக்கின்றதா?**

பதில்: இன்றும் கல்கத்தா சென்றால், அங்கு இருக்கக்கூடிய பிரதானமான காளி கோவிலில், சர்வசாதாரணமாக, ஆடுகள் பலியிடப்படுவதை பார்க்கலாம். அவர்களை அங்கு, பூஜாரி என்று அழைப்பார்கள். இன்றும், தமிழ்நாட்டில் சிவாலயங்களில் பூஜை செய்கின்றவர்களை, சிவாச்சார்யர் அல்லது குருக்கள் என்றும், வைணவ ஆலயங்களில் பூஜை செய்பவர்களை, பட்டர் என்றும் அழைப்பதை பார்க்கலாம். ஆனால், கிராமங்களில் பலி கொடுத்து, கிராம தேவதைகளை வழிபாடு செய்பவர்களை, நாம் இன்றும் பூசாரி என்றுதான் அழைக்கின்றோம். வங்காளத்திலிருந்துதான், இந்த பழக்கம் நம்நாட்டிற்கு வந்திருப்பதால்தான், இன்றளவிலும் அவர்களுக்கு பூஜாரி என்ற பெயரே நிலைத்துள்ளது.

**கேள்வி: என் வீட்டிற்கு ஒரு சாது வந்திருந்தார். இறைவனுக்கு நிவேதனம் செய்த பிரசாதத்தை அவருக்கு கொடுத்தேன். அப்பொழுது அவர், அடியார்களுக்கு, இறைவனுக்கு நிவேதனம் செய்ததை, கொடுக்ககூடாது என்று சொல்லி சென்று விட்டார். எனக்கு காரணம் புரியவில்லை. ஏன் அவர் அப்படி சொன்னார்?**

பதில்: இறைவனுடைய அடியார்களும், துறவிகளும், தாங்கள் உணவு அருந்தும் முன், அதை மானசீகமாக, இறைவனுக்கு அர்ப்பணம் செய்து விட்டே, சாப்பிடுவார்கள். நாம் ஏற்கனவே இறைவனுக்கு நிவேதனம் செய்ததை, அவர்களுக்கு கொடுத்தால், அது இரண்டு முறை நிவேதனம் செய்தது போலாகி விடும். அதனால்தான், அவர் அப்படி சொல்லி இருக்கின்றார்.



**கேள்வி: யார் அறிவாளி?**

பதில்: கிடைக்கின்ற பல நன்மைகளில், சிறந்த நன்மையையும், , ஒரு தீமை நடந்தே ஆக வேண்டுமானால், அதில் மிகவும் ஒரு குறைந்த தீமையை தேர்ந்தெடுப்பது - இவைகளை செய்பவனே புத்திசாலி.

**கேள்வி: நான் இறைவனிடம் பிரார்த்தனை செய்யும்பொழுது எப்படி செய்ய வேண்டும்?**

பதில்: இன்னும் சற்று நேரத்தில், நம் உயிர் பிரியப்போவதாக வைத்து கொள்வோம். அப்பொழுது, நமக்கு பிரார்த்தனை செய்ய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால், எப்படி செய்வோமோ, அப்படி ஒவ்வொருமுறை பிரார்த்தனை செய்யும்பொழுதும், நாம் பிரார்த்தனை செய்ய வேண்டும்.




# கோவிந்தபுரம் சைதன்யகுடீரத்தில் சத்சங்கம்

ஒரே மாதத்தில், இரண்டு அமாவாஸ்யைகள் வருமானால், அது மல மாதம், அதிக மாதம் என்றும் புருஷோத்தம மாதம் என்றும் அழைக்கப்படும். நம் பக்கத்தில், இந்த மாதத்தில், நல்ல காரியங்கள் எதுவும் செய்ய மாட்டார்கள். ஆனால், வட இந்தியாவில், அதிலும் குறிப்பாக பூரி ஜகன்னாதம், பண்டரீபுரம், ப்ருந்தாவனம் போன்ற க்ஷேத்திரங்களில், மாதம் முழுவதும் சத்சங்கங்களே நடக்கும். இந்த மாதத்தில் செய்யும் கீர்த்தனம், ஜபம், பாராயணம், கதாஸ்ரவணம் போன்றவற்றிற்கு, அனந்தமான பலன்கள் உண்டு.

சென்ற முறை, இது மாதிரியாக புருஷோத்தம மாதம் வந்தபொழுது, பரனூர் எனும் பக்தபுரியில், நமது சத்சங்க அன்பர்களால், அந்த மாதம் முழுவதும் மஹாமந்திர அகண்ட நாம கீர்த்தனம் நடைபெற்றது. அப்பொழுது அந்த மாதம் முழுவதும் ஸ்ரீஸ்ரீ அண்ணா அவர்கள், சைதன்ய சரித்திரம் உபன்யாசம் செய்தார்கள். அதன் கை மேல் பலனாக, கோவிந்தபுரத்தில் சைதன்ய குடீரம் ப்ராப்தமாயிற்று. பூரியை போன்றே ஜகன்னாதர், சுபத்ரா, பலராமர் மூர்த்திகள் பூரியிலிருந்தே தருவித்து, ஸ்ரீபோதேந்திராள் ஆராதனை அன்று, ஸ்ரீஸ்ரீ அண்ணா அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். அங்கு சைதன்ய தேவரும், நித்யானந்தரும் திவ்ய மங்கள விக்ரஹத்துடன் எழுந்தருளியுள்ளார்கள்.

அன்றிலிருந்து தொடர்ந்து பகல் முழுவதும், அகண்டமாக மஹாமந்திர கீர்த்தனம் நடந்து வருகின்றது. இது போலவே, மதுரபுரி ஆஸ்ரமம், தூத்துக்குடி, சிவகாசி போன்ற இடங்களிலும் அகண்ட மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்று வருகின்றது. இந்த சைதன்ய குடீரத்தில் பகவான் தானே ஸுப்ரசன்னராக எழுந்தருளியுள்ளதால், இதனுள் வந்து தங்குபவர்களின் பக்குவத்திற்கேற்ப சாந்தியும், ஸ்வப்ன சாக்ஷாத்காரமும்,





காரியசித்தியும், பக்தி ருசியும் ஏற்படுவது அவரவர்களுடைய அனுபவம். ஆரம்பித்த நாளில் இருந்து, காமம், காஞ்சனம், கீர்த்தி போன்ற உலக சுகங்களை வெறுத்து, சாந்தமாக யாருடைய வம்பிற்கும் போகாமல், தான் உண்டு, தன் கைங்கரியம் உண்டு என்று விஷ்ணுராத பாகவதர் ஜகன்னாதன் கைங்கரியமே லக்ஷியம் என்று உள்ளார்.

இந்த விக்ருதி வருடம் பிறந்த மாதமான சித்திரை மாதமே, அதிமாஸமாக வந்ததால், இந்த வருடம் குரு கிருபையால், சைதன்யகுடீரத்தில் சத்சங்கம் ப்ராப்தமாயிற்று. ஏப்ரல் 15ம் தேதி காலை கோவிந்தபுரம் வந்த ஸ்ரீஸ்ரீ அண்ணாவிற்கு, வேட்டுக்கள் முழங்க, மங்கள வாத்யங்கள், நாமசங்கீர்த்தனம், வேதகோஷம், பூர்ண கும்பம், சத்ர சாமர ஸகல மரியாதைகளுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. யானை ஸ்ரீஸ்ரீ அண்ணாவிற்கு மாலையிட்டு வரவேற்றது. வியாசபீடத்தில் வந்து அமர்ந்த ஸ்ரீஸ்ரீஅண்ணாவிற்கு, பாகவதர்கள் ப்ருதாவளி சொல்ல குங்குமப்பூவால் அபிஷேகம் செய்யப்பட்டது கண்கொள்ளா காட்சியாக இருந்தது.

ஏப்ரல் 15ஆம் தேதி முதல் 21ஆம் தேதி வரை தினமும் காலை 8மணி முதல் 10மணி வரை, ஸ்ரீஸ்ரீ அண்ணா அவர்களால் விஷ்ணு சஹஸ்ரநாம பாஷ்ய பாடம் சொல்லப்பட்டது. மாலை மூன்று மணி முதல் ஐந்து மணி வரை, சைதன்ய சரிதாம்ருதம் பிரவசனம் செய்யப்பட்டது. மாலையில், இந்தியாவின் பல ஊர்களில் இருந்து வந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள், காவிக்கொடி ஏந்தி தன்னை மறந்து மஹாமந்திரகீர்த்தனம் செய்தது கண்கொள்ளா காட்சி. இந்த சத்சங்கத்தில் கலந்து கொண்ட பக்தர்கள் எல்லோரும் பாக்யவான்கள். நாமாம்ருதத்தை, எல்லோரும் போட்டி போட்டு கொண்டு அள்ளி கொண்டு செல்ல, சத்சங்கம் இனிதே பூர்த்தியாயிற்று.

Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



Gururam Consulting Private Limited




## பாகவத பழம் ②

**இரண்டாம் பாகம்**

– ஸ்ரீஸ்வாமிஜி

முதல் ஸ்கந்தத்தின் முடிவான பத்தொன்பதாவது அத்யாயத்தில், பரீக்ஷித் ஸர்வசங்க பரித்யாகம் செய்து கங்கைக்கரைக்கு வருகின்றான். அப்படி வந்த பரீக்ஷித், இன்னும் தனக்கு வாழ்க்கை ஏழு நாட்களே இருப்பதை உணர்ந்து, தவிக்கின்றான். அந்த ஏழு நாட்களுக்குள் என்ன செய்ய வேண்டும், யாரை அண்ட வேண்டும், எதைக்கேட்க வேண்டும், இந்த சம்சார வியாதிக்கு மருந்து என்ன என்று, சாக்ஷாத் சுகப்ரும்மத்தை பார்த்து, வினவுவதை பார்க்கலாம். சுகர், நவம ஸ்கந்தத்தின் முடிவில், கிருஷ்ணனுடைய கதையை சுருக்கி சொல்லி முடிக்கின்றார்.

அதே பரீக்ஷித், பத்தாவது ஸ்கந்தத்தின் ஆரம்பத்திலேயே, ஸ்ரீசுகரை பார்த்து, "சூரிய, சந்திர வம்ஸத்து ராஜாக்களின் கதைகளை எல்லாம் சொன்னீர்கள். ஆனால் , சம்ஸார வியாதிக்கு மருந்தான, மனோஹரமான கிருஷ்ண கதையை சுருக்கி விட்டீர்களே" என்கின்றான். முதல் ஸ்கந்தத்தில், ஸம்ஸார வியாதிக்கு மருந்து என்ன என்று சுகப்ரும்மத்தை பார்த்து கேட்ட அதே பரீக்ஷித், பத்தாவது ஸ்கந்தத்தில் சுகப்ரும்மத்தை பார்த்து, ஸம்ஸார வியாதிக்கு மருந்தான கிருஷ்ண கதையை சுருக்கி

**பகவானின் ப்ரேரணையை சிரமேற்கொண்டு, மஹான்கள் சமாதி கைகூடியும், அதை சஹஜ சமாதியாக்கிக்கொண்டு, பாகவதம் சொல்வார்கள். அவர்களிடம் கேட்டால் போதும்; அது ஒன்றினாலேயே நமக்கும் உயர்ந்த சமாதி கைகூடி விடும். படித்து, கேட்டு கதை சொல்வது வேறு. இது வேறு.**

விட்டீர்களே என்று கூறுவதிலிருந்தே , நவம ஸ்கந்தங்கள் வரை கேட்ட பரீக்ஷித், கிருஷ்ண கதையை கேட்டு சித்தி அடைந்து விட்டான் என்பதைக் காட்டுகின்றது.

நவ விதமான பக்தி சாதனங்களில் சிரவணம்தான் மிகவும் முக்கியமானது. அதனால்தான், நவ விதமான சாதனங்களை வரிசைப்படுத்தும்பொழுது, முதலில் சிரவணத்தை சொன்னார். சாக்ஷாத் ருக்மணி பிராட்டியும் "ஸ்ருத்வா குணான் புவனசுந்தரா" என்றுதான் தன்னுடைய கடிதத்தை ஆரம்பிக்கின்றாள். சரி; சிரவணம்தான் முக்கியம், யாரிடம் சிரவணம் செய்ய வேண்டும் என்று பார்ப்போமா?

தியானம் என்றொரு வார்த்தையை நாம் அடிக்கடி கேள்விப்படுகின்றோம், படிக்கின்றோம். கண்களை மூடிக்கொண்டு, சிறிது நேரம் உட்கார்ந்திருப்பதுதான், பிரஸித்தமான தியானம் என்று ஆகி விட்டது. ஆனால், யார் தியானம் செய்கின்றானோ, அவன் ஆயுள் முடிகின்ற வரையில், தியானம் செய்து கொண்டிருக்கத்தான் வேண்டும். பிறகு என்ன? தியானம் கைகூட வேண்டும். தூக்கம், விழிப்பு, கனவு என்பது போல தியானமும் ஒரு நிலை. யாராவது நான் தூங்கப்போகின்றேன் என்று கூறுகின்றார்களா? தூக்கம் வந்து விட்டது என்கின்றார்கள். தூக்கம் வந்து விட்டால் அதை கலைப்பது மிகவும் கடினமாக உள்ளது. தூக்கம் வரவில்லை என்றால் தவிக்கின்றார்கள். அதுபோல் தியானம் வரவேண்டும்; அந்த நிலைக்கு செல்ல வேண்டும் என்ற தவிப்பு வேண்டும்; அதிலிருந்து கலைந்து வருவதற்கு சிரமப்பட வேண்டும். பகவானுடைய அருளால்தான், தெய்வத்தை பற்றிய சிந்தனையும், பக்தியும், ஞானமும், வைராக்கியமும் கைகூடிவிட்ட மஹான்கள், சுலபமாக குறுகிய காலத்திற்குள், ஸமாதி நிலைக்கு சென்று விடுகிறார்கள். அந்த நிலையில், அவர்களுக்கு



பகவானிடமிருந்து ஒரு பிரேரணை வரும். "உலகத்தில் உள்ள ஜனங்களுடைய ஹ்ருதயத்தில் கொதித்து கொண்டிருக்கும் ஸம்ஸார அக்னியை, பாகவதமாகிய பகவத்குணம் சொல்லி சாந்தப்படுத்து" என்பதே அது. பகவானின் ப்ரேரணையை சிரமேற்கொண்டு, அவர்கள் சமாதி கைகூடியும், அதை சஹஜசமாதியாக்கிக்கொண்டு, பாகவதம் சொல்வார்கள். அவர்களிடம் கேட்டால் போதும்; அது ஒன்றினாலேயே நமக்கும் உயர்ந்த சமாதி கைகூடி விடும். படித்து, கேட்டு கதை சொல்வது வேறு. இது வேறு.

**யார் தியானம் செய்கின்றானோ அவன் ஆயுள் முடிகின்ற வரையில் தியானம் செய்து கொண்டிருக்கத்தான் வேண்டும். பிறகு என்ன? தியானம் கைகூட வேண்டும். தூக்கம், விழிப்பு, கனவு என்பது போல தியானமும் ஒரு நிலை. யாராவது நான் தூங்கப்போகின்றேன் என்று கூறுகின்றார்களா? தூக்கம் வந்து விட்டது என்கின்றார்கள். தூக்கம் வந்து விட்டால் அதை கலைப்பது மிகவும் கடினமாக உள்ளது. தூக்கம் வரவில்லை என்றால் தவிக்கின்றார்கள். அதுபோல் தியானம் வரவேண்டும்**

கர்ப்பத்திலேயே ஜீவன் முக்தராக இருந்த சுகர், தன்னுடைய சமாதி நிலையிலிருந்து கொண்டு, வியாசரான தன்னுடைய தந்தையுடன் கூட கலந்து பழகமுடியாமல், ஜனசஞ்சாரமில்லாத காட்டிற்கு சென்று விட்டார். அப்படி சென்ற அவர், அன்னம், பான, நித்திரை எதுவும் இல்லாமல் இருந்தார். அவர் அப்படி கிளம்பி போகும்பொழுது வியாசர், புத்திர விரஹத்தினால்

தவித்து "புத்ரா, புத்ரா" என்றழைத்தாராம். சுகரோ கேட்பது, கேட்பவர், அழைப்பவர் என்ற நிலையை தாண்டி இருந்ததால், அவர் தன் கால் போன போக்கில் போய்க்கொண்டு இருந்தார்.

வியாசருடைய சிஷ்யர்கள் தினமும் காட்டிற்கு சென்று தர்ப்பை, சமித்து, புஷ்பம், பழம் எடுத்து வருவார்கள். அப்படி அவர்கள் சென்று வருகையில், காட்டில் கொஞ்சம் கொஞ்சமாக கொடிய விலங்குகளும், விஷஜந்துக்களும் அதிகரித்து வருவதை உணர்ந்து, தொடர்ந்து செல்வதற்கு பயந்தார்கள். தங்களுடைய குருவான வியாசரிடம் வந்து, இதை தெரிவித்து, காட்டிற்கு பயம் இல்லாமல் சென்று வர ரக்ஷை கேட்டார்கள்.

வியாசர், தாயத்து கொடுக்கவில்லை. யந்திரம், மந்திரம் என்றும் சொல்லவில்லை. தான் செய்ததிலேயே, சிரேஷ்டமானதாக உள்ள ஸ்ரீமத்பாகவதத்திலிருந்து ஒரு சுலோகத்தை சொல்லி கொடுத்தார். என்ன சுலோகம் அது? தசமஸ்கந்தத்தில் பூர்வார்த்தத்தில், உள்ள இருபத்தி ஒன்றாவது அத்தியாயத்தில் உள்ள ஒரு சுலோகம்தான் அது. பகவானின் வேணு கானத்தை வர்ணிக்கும் வேணுகீத அத்தியாயம் இது. பகவான் அப்படி வேணுகானம் செய்யும்பொழுது, அவனுடைய அவஸரத்தை வர்ணிக்கும் "பர்ஹாபீடம்" என்று தொடங்கும் சுலோகம்தான் அது. அதை சொல்லிக்கொண்டே, அவர்கள் காட்டிற்கு பயமில்லாமல் சென்று வர, அவர்களுக்கு ஒரு வித்தியாசமான அனுபவம் ஏற்பட்டது. என்ன அது?

***பர்ஹாபீடம் என்று சொல்லிக்கொண்டிருக்கும் சீடர்களை சுற்றி, துஷ்ட மிருகங்களும், விஷஜந்துக்களும், நாய்க்குட்டி மாதிரி வாலை ஆட்டிக்கொண்டு வந்து சூழ்ந்து நின்றனவாம்.***

(கனியும்)



## சனாதனப் புதிர் - பகுதி - 15

( விடைகள் அடுத்த இதழில்)

–ஆத்ரேயன்

1. ஆதிசங்கரர் ப்ரதிஷ்டை செய்த ஸ்படிக லிங்கங்கள் எத்தனை? எங்கே ப்ரதிஷ்டை செய்தார்?
2. அருள்மொழி வர்மன் என்ற அரசன் யார்? இவரது மற்ற பெயர்கள் என்ன?
3. நீதி சாஸ்திரம் ஐந்து பேரை அப்பாவாக கருதலாம் என சொல்கிறது? அந்த ஐவர் யார்?
4. புத்தருடைய மற்றொரு பெயர் என்ன?
5. திருமூலர் திருமந்திரத்தில் குருவைப்பற்றி என்ன சொல்லுகிறார்?
6. திருச்சாழல் என்ற பாடல் எங்கே காணப்படுகிறது?
7. மருள் நீக்கியார் – இவர் யார்? இவரது மற்ற பெயர்கள் என்ன? இவரது சகோதரியின் பெயர் என்ன?
8. திருக்கண்டியூர் என்ற க்ஷேத்திரம் எங்கு இருக்கிறது? இதன் விசேஷம் என்ன?
9. மருத மரத்தை (அர்ஜுன மரத்தை) ஸ்தல வ்ருக்ஷமாக கொண்ட மூன்று க்ஷேத்திரங்கள் எங்கு இருக்கின்றன?
10. ஆதிசங்கரர், ஸ்ரீரங்கத்திலும் திருப்பதியிலும் ஸ்தாபித்த யந்திரங்களின் பெயர் என்ன?



# மொட்டை

– ஸ்ரீஸ்வாமிஜி

கையெழுத்து போட தைரியமில்லாமல் எழுதப்படும் கடிதங்களுக்கு, மொட்டை கடிதம் என்று பெயர். ஒரு புத்தகத்திற்கு தலைப்பு இல்லாவிட்டாலும், மொட்டையாக உள்ளது என்கிறோம். நம்முடைய நாட்டின் நாகரீகத்தின்படி, குழந்தை பிறந்தவுடன், தங்களுடைய குல தெய்வ கோவிலுக்கு அழைத்து சென்று, மொட்டை அடிக்கின்றார்கள். அதுபோல் நினைத்தது நடக்கவும், சிலர், கோவிலில் வந்து மொட்டை போட்டு கொள்வதாக, வேண்டி கொள்கின்றார்கள். அதுவும் திருப்பதி, பழனி, திருச்செந்தூர், சமயபுரம் மற்றும் இது போன்ற எண்ணற்ற கோவில்களில், பெரிய அளவில், பக்தர்களால் நிறைவேற்றப்படுகின்றது. அப்படி வரும் முடி காணிக்கைகள், பல கோடிகளுக்கு ஏலம் விடப்படுவதாகவும் அறிகின்றோம். இதற்கு நேர் மாறாக சீக்கியர்களும், மகமதியர்களும் நீண்டதாக தாடி வளர்த்து கொள்கின்றார்கள். தலையில் வளரும் முடியையும் வெட்டுவது இல்லை. இயற்கையில் பெண்களுக்கு தாடி, மீசை வளருவதில்லை. நம்நாட்டு பெண்கள் தலைமுடியை கத்தரித்து கொள்வதும் இல்லை. ஜீவராசிகளிலேயே அதிக பராக்கிரமம் உடையது சிங்கம். அதற்கு ரோமங்களால் ஆன அழகான பிடரி இருப்பதை பார்க்கின்றோம்.

மஹாபாரதத்தில் துரோணரின் குமாரனான அஸ்வத்தாமா, மஹாபாரத யுத்தம் முடிந்த பிறகு, தன்னையும் தன் தந்தையையும் பல வசதிகளுடன் ஆதரித்து வந்த துரியோதனனுக்கு ஏற்பட்ட நிலையை அறிந்து வருத்தமுற்றான். அவனுடைய மனது, ஆத்திரத்தால் அறிவிழந்தது. பாண்டவர்களை பழிவாங்க நினைத்தான். எப்படி என்று செய்வதறியாது திகைத்தான். காமத்தால் பீடிக்கப்பட்டவன், பயந்தவன், கவலை அடைந்தவன், அவமானப்பட்டவன், ஆத்திரமடைந்தவன், பைத்தியம் பிடித்தவன், தீராத நோயினால் பிடிக்கப்பட்டவன் இவர்களுக்கு எளிதில் தூக்கம் வராது. அஸ்வத்தாமா காட்டை அடைந்து ஒரு



ஆலமரத்தின் அடியில் தங்கியிருந்தான். உறக்கம் வரவில்லை. எப்படி பாண்டவர்களை பழிவாங்குவது என்று சிந்தித்து கொண்டு, தீராத வெறியுடன் உலாவி கொண்டிருந்தான். அந்த ஆலமரத்தில் பல பறவைகள் கூடு கட்டி, முட்டையிட்டு, குஞ்சு பொறித்திருந்தன. அப்பொழுது, இரவில் சஞ்சரிக்கக்கூடிய ஆந்தைகள் வந்து கூட்டை கலைத்து, குஞ்சுகளையும் முட்டைகளையும் உடைத்து, அங்கிருந்த பல கூடுகளை சின்னாபின்னமாக்கின. பறவைகள் மரத்திலிருந்து வெளியே கிளம்பி சப்தமிட்டபடி, தங்களுடைய குஞ்சுகள், முட்டைகள், கூடுகள் இவைகளை காப்பாற்ற முடியாத துக்கத்தால் அலறின.

பாண்டவர்களை பழிவாங்குவதற்கு வழி தெரியாமல் திகைத்து கொண்டிருந்த அஸ்வத்தாமாவிற்கு, ஆந்தை வழிகாட்டியது போல் இருந்தது. கூடாரத்தில் தூங்கி கொண்டிருக்கும் திரௌபதியின் குழந்தைகளை கொல்வதுதான் இதற்கு ஒரே வழி என்று தீர்மானித்து, அதன்படி செய்ய முடிவெடுத்தான். அதன்படியே, கூடாரத்தில் இருந்த திரௌபதியின் குழந்தைகளை கொன்று குவித்தான். காலையில் குழந்தைகள் கொல்லப்பட்டு இருப்பதை பார்த்த திரௌபதி, செய்வதறியாமல் திகைத்தாள். புத்திர சோகத்தால் தவிக்கும் திரௌபதியை சமாதானப்படுத்த அர்ஜுனன், அப்பொழுது ஒரு வீர சபதம் செய்தான். தங்களுடைய குழந்தைகளை கொன்றவனை கண்டுபிடித்து, திரௌபதி முன்பாக அழைத்து வந்து, அவனை கொல்வதாக சபதமெடுத்து கொண்டான். அர்ஜுனன் அஸ்வத்தாமாவை பிடித்து இழுத்து வந்து, திரௌபதியின் முன்பு நிறுத்தினான். தன் குழந்தைகளை கொன்றது தங்களது குருவான துரோணரின் மகனான அஸ்வத்தாமா என்று தெரிந்து கொண்ட திரௌபதி, அந்த நிலையிலும், அவனை நமஸ்கரித்தாள். குருபுத்ரனான அவனை கொல்வது பாவம் என்றாள். குரு அவருடைய குமாரன் உருவில், இன்றும் இருந்து வருகின்றார் என்றாள். மேலும் இவனை கொலை செய்வதால், இறந்த என்

குழந்தைகள் உயிருடன் வந்து விட போகின்றார்களா? என்றாள். மேலும், "துரோணருடைய மனைவி கௌதமி இன்னும் உயிரோடு இருக்கின்றாள். அவள் மிகவும் பதிவ்ரதை. இவனை கொன்றுவிட்டால், நான் எப்படி இப்பொழுது புத்திரசோகத்தால் தவிக்கின்றேனோ, அப்படித்தானே அவளும் தவிப்பாள்! ஆகவே அஸ்வத்தாமாவை விட்டு விடுங்கள்" என்றாள். தர்மபுத்திரர் திரௌபதி சொன்னதை கேட்டு, மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். கிருஷ்ணனும் திரௌபதி சொன்னதை கேட்டு, மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். பீமன் திரௌபதி சொன்னதை ஆமோதிக்கவில்லை. ஆயுதம் எடுத்தவன், "குருவோ, குருபுத்திரனோ, அந்தணனோ யாராயினும் அவன் கொல்ல தகுந்தவன்" என்று கொக்கரித்தான். கிருஷ்ணன், பீமன் சொன்னதும் சரி என்றான்.

அர்ஜூனனும் இப்பொழுது செய்வதறியாது திகைத்தான். கிருஷ்ணனோ அர்ஜூனனை பார்த்து, "திரௌபதி, தர்மபுத்திரர், பீமன் எல்லோருக்கும் ஹிதத்தை செய்" என்றான். அர்ஜூனனோ கிருஷ்ணனை பார்த்து, "ஆளாளுக்கு இப்படி சொன்னால் என்ன செய்வது" என்றான். அர்ஜூனன், கிருஷ்ணனிடம் "நான் வேறு குழந்தைகளை கொன்றவனை கொல்வதாக சபதம் செய்து விட்டேனே; இப்பொழுது என்ன செய்வது" என்று குழம்பினான். பகவான், அர்ஜூனனை பார்த்து, இவனை கொலை செய்யவும் வேண்டாம்; அதே சமயத்தில் நீ செய்த சபதத்தை நிறைவேற்றவும் வழி உண்டு என்றான். அர்ஜுனன் அது என்ன என்று கேட்டான். "இவனுடைய தலையில் உள்ள கேசத்தை எடுத்து விட்டால், அது உயிரை எடுப்பதற்கு சமம்" என்றான் கண்ணன். அதன்படியே அர்ஜூனனும் செய்ய அஸ்வத்தாமாவும் உயிர் பிழைத்து ஓடினான். பிறகு உத்தரையின் கர்ப்பத்தில் இருந்த பரீக்ஷித்தை கொல்வதற்கு பிரும்மாஸ்திரம் எய்தான். அது வேறு விஷயம்.

***இந்த சம்பவத்திலிருந்து என்ன தெரிகின்றது? ஒரு மனிதனின் தலையில் இருக்கக்கூடிய முடியை எடுப்பதும் உயிரை எடுப்பதும் ஒன்றுதான் என்பதுதானே அது!***



ஒரு குழந்தை பிறந்தவுடன் சில பால(bala) கிரஹங்கள் குழந்தைகளை கொல்ல வருவதுண்டு. ஸ்ரீமத்பாகவதத்தில் கூட, குழந்தை கிருஷ்ணனை கொல்வதற்கு பல குரூர கிரஹங்கள் அஸுரர்கள் வடிவில் வருவதை பார்க்கின்றோம். அப்படி எதுவும் பிறந்த குழந்தையை கொன்றுவிடக்கூடாது என்பதற்காகத்தான் பிறந்த குழந்தைக்கு குலதெய்வத்திடம் முடியை கொடுத்து, நாமாக ஒருமுறை உயிரை எடுத்து விடுகின்றோம். அதுபோல் சிலர், நான் உனக்காக என் உயிரையே கொடுப்பேன் என்கின்றார்கள் அல்லவா? அதுபோல் பகவானிடமும், "நீ என்னுடைய பிரார்த்தனையை நிறைவேற்று; உனக்கு என் உயிரையே தருகின்றேன்" என்று கூறி, அவ்வப்பொழுது முடி எடுத்து கொள்கின்றார்கள்.

நம்முடைய பாரத தேசத்தின் பாரம்பரியப்படி துறவு என்பது மறுபிறப்புக்கு சமம். அதனால்தான் முதல்பிறவியில் உயிர் போய்விட்டது என்பதன் அடையாளமாக துறவிகள், துறவு வாழ்க்கையில் மொட்டை தலையுடனே இருந்து விடுகின்றார்கள். அந்த காலத்தில் கணவனை இழந்த பெண்கள், கணவனுடன் உடன்கட்டை ஏறி உயிரை விடுவது என்று ஒரு பழக்கம் இருந்து வந்தது. ஒருகாலத்தில் அது perversion ஆக மாறி பெண்கள் பலாத்காரமாக தீயில் போடப்பட்டனர். அப்பொழுது அதை எதிர்த்து ராஜாராம்மோகன்ராய் போராடினார். வேதகாலத்திலேயே உடன்கட்டை ஏறுவது என்பது கட்டாயமாக்கப்படவில்லை. கணவனை இழந்த பெண்கள், தலையை மழித்துக்கொண்டு வாழ்ந்துவந்தார்கள். அதாவது, உயிரை விட முடியாதவர்கள் தலையை மழித்துக் கொண்டார்கள் என்பதிலிருந்து தலையை மழித்து கொள்வதும், உயிரை விடுவதும் ஒன்று என்று தெரிகின்றது அல்லவா? ***உயிருக்கும் தலைமுடிக்கும் இருக்கும் தொடர்பை, வரும் கால விஞ்ஞானம் நிரூபிக்கவும் செய்யும்.***

# பாலகர்களுக்கு ஒரு கதை



பூமாதேவியை பாருங்கள்! ஒரு மூட்டை விதை விதைத்தால், பல மூட்டை நெல் விளைகிறதே! பூமியிலிருந்து இப்படி தானியங்கள் மட்டுமின்றி, வைரம், தங்கம், வெள்ளி என விலை உயர்ந்த பொருட்களும் கிடைக்கின்றன. ஸ்ரீதேவியான செல்வமும் பூமாதேவியிடமிருந்தே வருகிறாள். பூதேவியும் ஸ்ரீதேவியும் இணைந்தே பெருமாள் இருக்கிறார். பகவான் (பூதேவி போல்) எதை அர்ப்பணித்தாலும், அதை பன்மடங்காய் திருப்பி அருள்வார்.

கண்ணன் கோகுலத்தில் தளர்நடை போட்டு வரும் காலம். ஒரு பாட்டி, கண்ணனின் வீட்டு தெரு வழியாக நாகப்பழம் கூவி விற்று வருகிறாள். தலை முழுவதும் நரை, ஒடுங்கிய கன்னம், பற்களே இல்லை, கந்தலான உடை, நடப்பதற்கும் வலு இல்லை – இப்படி இருக்கும் அம்மூதாட்டி, கூவி கூவி விற்றவாறு வந்தாள்.

கண்ணனின் வீட்டருகில் வந்தாயிற்று. அதற்கே காத்திருந்தாற்போல், கண்ணன் பாட்டியை பார்த்து "பாட்டி, என்ன கூடையில் வைத்து உள்ளாய்?" என்றான். கண்ணனின் மழலை கேள்வியிலும் அழகிலும் மயங்கிய அந்த பாட்டி, புன்முறுவலித்து "நாகப்பழம்" என்றாள். "எங்கே காண்பி" என்றான். கூடையை கீழே வைத்தாள் பாட்டி. மூவுலகளந்த வாமனனினும் சிறு உருவான கண்ணன், அந்த கூடையில் பாட்டி காட்டிய பழங்களை குறை சொல்லி வந்தான். "பழம் சிறியது; மண் ஒட்டியுள்ளது; பழுக்கவில்லை; அடிபட்டு உள்ளது" என சொல்லிக்கொண்டே வந்தான். மழலையானால் யாரும் மயங்குவர். வாமனனின் அழகில் பலிசக்கரவர்த்தியே சொக்கி போனானாம். இவனோ மாயன். அழகே உருவானவன். சிறு கைகளை அவன் ஆட்டி பேசுவதையும், பாற்பற்கள் தெரிய சிரிப்பதிலும், சுருண்ட கேசத்திலும், கருத்த திருமேனியில் யசோதையை சிரமப்படுத்தி கட்டிக்கொண்ட



வெள்ளை அரைஞாணும், உந்தியும் பாட்டியை அப்படியே கட்டி போட்டு விட்டது. பாட்டி சொன்னாள் "சரி குழந்தை! உனக்கே எது பிடிக்குமோ, அதை எல்லாவற்றையும் எடுத்துக் கொள்" என்றாள். இந்த பதிலுக்காக காத்திருந்தவன் போல், கூடையில் கையை விட்டு அள்ளிக்கொண்டான். "பாட்டி காத்திரு! பணம் கொண்டு வந்து தருகிறேன்" என்றவாறு உள்ளே ஓடினான். மதம் பிடித்த சிறு குட்டி யானை ஓட்டமாய் ஓடினால் எப்படி இருக்கும். முறையற்ற ஓட்டம்; ஆனால் அழுத்தமாய் பார்ப்பவரின் மனதை கொள்ளை கொண்டு விடும். பாட்டி கண்ணனின் பதிலையே கேட்டாளில்லை. அழகில் மயங்கி உட்கார்ந்திருந்தாள்.

பண்டைய காலங்களில் பண்டம் மாற்று முறை என, எள், கடலை, உளுந்து, அரிசி போன்றவற்றை விற்று, மாற்றாக அவற்றில் ஒன்றை பெற்று செல்வதுண்டு.

கண்ணனும் உள்ளே சென்று கையில் நெல்மணிகளை அள்ளி வந்தான். கைவிரல்களில் இருக்கும் இடுக்குகளின் வழியாய் எல்லாம் சிந்தி விட்டது. இரு நெல்மணிகளே மிஞ்சின. "இந்தா" என பாட்டியிடம் நீட்டினான். இரு மணிகளே இருப்பதை பார்த்து சிரித்த அவள், அதை கூடையில் போட சொன்னாள்.

வீட்டில் சென்று பார்க்கையில், கூடை முழுவதும் நவரத்தினங்கள். கண்ணன் மனதில் சிந்தனை "ஆஹா! பாட்டி இனி கஷ்டப்பட வேண்டிய அவசியமே இல்லை. அதை கொண்டு சௌகரியமாக இருக்கலாம்". ஆனால் பாட்டி, மறுநாளும் அதே கோலத்தில் நாகப்பழ கூடையுடன் வந்தாள். கண்ணனுக்கு சந்தேகம். பாட்டியை யாராவது ஏமாற்றி விட்டார்களோ? திருடிக்கொண்டார்களோ? "பாட்டி, கூடையில் என்ன இருந்தது என பார்த்தாயா" என கேட்டான். அவளும் "ஆஹா பார்த்தேனே! நீதான் நவரத்தினங்களால் நிறைத்திருந்தாயே" என்றாள். கண்ணன் கேட்டான் "அவற்றை என்ன செய்தாய்?". பாட்டி "நீயே பார்" என கூடையினுள் காட்டினாள். அங்கே கண்ணனுக்கு பொருத்தமாய் கண்ணன் கால்களுக்கு கொலுசு, கழுத்திற்கு முத்து மாலை,

இடுப்பிற்கு ஒட்டியாணம், காதுகளுக்கு மோதிரம், மூக்கிற்கு புல்லாக்கு, கைகளுக்கு கங்கணம் என அளவெடுத்தாற் போல் செய்து கொண்டுவந்திருந்தாள். பாட்டியின் பக்தியை கண்டு ஆடிப்போய் விட்டான் கண்ணன். "இவள் தனக்கோ, தன் குடும்பத்தினருக்கோ ஒன்றும் செய்து கொள்ளாமல் எனக்கே அல்லவா திருப்பி கொடுத்திருக்கிறாள். இத்தனைக்கும் மிகவும் கஷ்டப்படுபவள்" - கண்ணன் மனதில் சிந்தனை வலைகள் இப்படி ஓடியது. வேறு விதமாய், அவளுக்கு அருள முடிவு செய்தான். பாட்டி இம்முறை வீட்டிற்கு சென்று பார்த்தால், வீடே நவரத்தினமாய் மாறி இருந்தது. கட்டிலும் ரத்தினமாய் மாறி இருந்தது. வேலையாட்களும் இருந்தனர்.

இப்பொழுது பாட்டி சிறிது நாட்களாக வரவில்லை. கண்ணன் மனதில் ஆவல். ஆஹா! பாட்டி நவரத்தினமான வீட்டில் சௌகரியமாய் இருப்பாள்! சென்று பார்த்து வருவோம் என முடிவு செய்தான். நந்தபாபாவை நச்சரித்து, நாவற்பழ பாட்டியின் ஊருக்கு சென்று பார்த்தால், அவள் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தாள். கண்ணனுக்கு தூக்கி வாரிப்போட்டது. "பாட்டி! என்ன இது. நவரத்தினமான வீட்டை என்ன செய்தாய்" என்றான். கண்ணனை கைத்தாங்கலாக பிடித்து கொண்டு போய் வீட்டை காட்டினாள் பாட்டி. வீட்டின் நடுவில், பாட்டி கண்ணனின் உருவத்தை கைச்சித்திரமாய் வரைந்தது அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அதற்கு ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டு, பூஜைகள் நடந்து கொண்டிருந்தன. கண்ணனை பார்த்து பொக்கை வாய் சிரிப்புடன் பாட்டி "இந்த அழகான கோவிலை பாதுகாக்கும் பொருட்டு நானே அருகில் ஒரு குடிசை போட்டு அதில் குடியிருந்து வருகிறேன்" என்றாளே பார்க்கலாம்! அவள் அன்பினால் நெகிழ்ந்து போன கண்ணன், அவளுக்கு சதுர்புஜத்துடன் தனது நிஜஸ்வரூபத்தை காட்டி அருளினான். மறுபடி அவள் தனக்கு ஏதும் பிரதி மறுபடி செய்து விடக்கூடாதே என்பதற்காக, அவளுக்கு தன்னையே கொடுத்தும் விட்டான்.



## *சென்ற மாத நிகழ்ச்சிகள்*

**மார்ச் 28 – ஆம்பூர் –** ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் சத்சங்கம் பல அன்பர்கள் சூழ நடைபெற்றது. இதைப்பற்றிய விவரமான குறிப்பு "நாமத்வார்" இணையதளத்தில் வெளியிடப்பட்டு இருந்தது.

**மார்ச் 30 – ஏப்ரல் 3 – பெங்களூர் ராமமூர்த்தி நகர் சுந்தர ஆஞ்சநேயர் கோவில் கும்பாபிஷேகம் இரண்டாவது வருட முடிவை ஒட்டி** நடைபெற்ற பூஜை, உபன்யாசம், புறப்பாடு ஆகியவற்றில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டார். ஏப்ரல்3ம் தேதியன்று, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருக்கரங்களால் ஹனுமாருக்கு, விசேஷ திருமஞ்சனம் செய்யப்பட்டது. மாலையில் வேதகோஷம், நாமகீர்த்தனத்துடனும், வாத்யமுழக்கத்துடனும், வாண வேடிக்கைகளுடனும் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் சுந்தர அனுமார் புறப்பாடு கண்டருளினார். மிகவும் திரளாக பக்தகோடிகள் வந்திருந்து குருவருளும், ஹனுமார் அருளும் பெற்று சென்றனர்.

**ஏப்ரல் 4 – விஜய் டி.வி. சார்பில் ஆழ்வார்பேட்டை நாரதகானசபாவில் துவங்கிய பக்தி திருவிழாவை** ஸ்ரீஸ்வாமிஜி தலைமை தாங்கி துவக்கி வைத்தார். துவக்கவிழாவில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், பக்தி மார்க்கத்திற்கு வழிகாட்டியான நாரதரின் சரித்திரத்தை, பாகவதத்தில் இருந்து எடுத்து உரைத்தார். பாரத மண்ணில் ஆன்மீகம் செழித்து ஓங்க போகும் நாள் தூரத்தில் இல்லை என தமது பேச்சின் முடிவில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கூறியது குறிப்பிடத்தக்கது.

**ஏப்ரல் 7 –மதுரை நாமத்வாரில்** காலை ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் சத்சங்கம் நடைபெற்றது. வத்தலகுண்டு, பெரியகுளம், அம்பை பகுதியில் இருந்தும் அன்பர்கள் வந்திருந்தனர். பின்னர் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் மதுரையில் உள்ள யோகிராம்சுரத்குமார் குருக்ஷேத்திரம் சென்று விட்டு சிவகாசி கிளம்பினார்கள்.

**ஏப்ரல் 7 –சிவகாசி நாமத்வாருக்கு** வந்திருந்த ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் நவதான்யம் திருமண மண்டபத்தில், மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. சிவகாசி யோகிராம்சுரத்குமார்




பஜனை மண்டலியில் நிகழ்ந்த சத்சங்கத்திலும் ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள்.


**ஏப்ரல் 8 – நாமமுத்து நகரான தூத்துக்குடியில்** ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் தலைமையில், அம்பிகா மஹாலில், மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நடந்தது. பின் தூத்துக்குடியில், புதிய நாமத்வாருக்கென ஸ்ரீஸ்வாமிஜியின் திருக்கரங்களினால் அடிக்கல்லும், பூமி பூஜையும் நடத்தப்பட்டது. பின்னர் ஸ்ரீஸ்வாமிஜி தூத்துக்குடி அருகிலுள்ள ஏரலில், மஹாமந்திரம் சொல்லி, பெரியவர்கள் கூடியிருக்க, ஒரு திருமணத்தை நடத்தி வைத்தார்.

**ஏப்ரல் 8 –திருச்சி நாமத்வாருக்கு** 8ஆம் தேதி மாலை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் சென்றிருந்தார். அங்கு கூடியிருந்த சுமார் 70அன்பர்கள் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தரிசனமும் ஆசியும் பெற்றனர்.

**ஏப்ரல் 14 –மதுரபுரி ஆஞ்சநேயர் கோவிலில் லக்ஷ தீபம் – விக்ருதி வருடம் சித்திரை முதல் நாளன்று** மதுரபுரி ஜெய ஆஞ்சநேயர் சன்னதியில் லக்ஷ தீபம் ஏற்றப்பட்டது. திரளாய் அன்பர்கள் வந்து விளக்கேற்றி சென்றனர். அன்று காலை ஸ்ரீஸ்வாமிஜியின் முன்னிலையில், ஸ்ரீகண்ணன் தீக்ஷிதர் பஞ்சாங்க படனம் செய்தார்.



## ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



பக்தமாலீஜி - 3

- ஜனனி

பக்தமாலீஜி பஜனையில், புதிதாக வந்து கலந்து கொண்ட பாலகனுக்கு பேடாக்களை அளித்தார். அவன் பேடாக்களை சாப்பிட்டுக்கொண்டே, பக்தமாலீஜியை பார்த்து சிரித்தான். பின் சென்று விட்டான். ஆனால் தன் புன்னகையையும் அழகான வடிவத்தையும் அவர் ஹ்ருதயத்தில் நிறுத்தி சென்று விட்டான். இரவும் பகலும் அவனது ரூபம், அவர் கண்களிலேயே இருந்தது. வித விதமான எண்ணங்கள், அவர் ஹ்ருதயத்தில் தோன்றின. "இவ்வளவு அழகான சிறுவனை இதற்கு முன் பார்த்ததே இல்லையே" என்று வியந்தார். "தானே வீட்டிற்குள் வந்தமர்ந்தான். பஜனையை எவ்வளவு ரசித்தான். நாரதரிடம் "மத்பக்தா: யத்ர காயந்தி தத்ர திஷ்டாமி" என்று கூறிய பகவான்தானோ இவன்?" என்று எல்லாம் சிந்திக்கலானார். சரி! எப்படியாக இருந்தாலும் அச்சிறுவன் தனது பெயரையும் முகவரியையும் கூறி சென்றுள்ளான். நாளையே சென்று பார்த்து விடலாம் என்று முடிவு செய்தார்.

மறுநாள் காலையிலேயே பக்தமாலீஜி பட்ரோட்-இல் உள்ள அக்ரூரர் கோயிலுக்கு சென்றார். அங்குள்ள பூஜாரியிடம் "இங்கு லட்டு என்ற பெயருடைய சிறுவன் உள்ளானா?" என்று கேட்டார்.

"லட்டு கோபால் என்பது எங்கள் கோவிலிலுள்ள டாகுரின் பெயர். வேறு எந்த சிறுவனும் இங்கு கிடையாது" என்றார் பூஜாரி. இதை கேட்ட மாத்திரத்தில், பக்த மாலீஜியின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. அதை துடைத்தவாறே "நேற்று மிகவும் சுந்தரமான ஒரு பாலகன் என் இல்லத்திற்கு வந்தான். தன்னுடைய

பெயர் லட்டு கோபால் என்றும் தான் இக்கோவிலில் வசிப்பதாகவும் என்னிடம் கூறினான். சாப்பிடுவதற்கு நான் அவனுக்கு பேடாக்களை அளித்தேன். அவைகளை உண்டு மகிழ்ந்தான். அது உங்கள் டாகுர்தானா என்று எனக்கு இப்பொழுது தோன்றுகிறது" என்று கூறினார்.

"பக்தமாலீஜி! தாங்கள் தன்யர் ஆனீர்கள். எங்கள் டாகுர்தான் தங்கள் மேல் கிருபை புரிந்திருக்கிறார் என்பதில் சந்தேகமே இல்லை. இவருக்கு பேடாக்கள் என்றால் உயிர். நிறைய நாட்களாக இவருக்கு, பேடாக்கள் நைவேத்யம் செய்ய முடியவில்லை. என்னால் பஜாருக்கு செல்ல முடியவில்லை. அதுதான் உங்களிடம் வந்துவிட்டான் போலிருக்கிறது!" என்று வியந்தார் பூஜாரி.

பக்தமாலீஜி கோயிலுள் சென்று பகவானை வணங்கி "ப்ரபோ! கிருபாஸாகரா! இவ்வாறு எனக்கு தரிசனம் கொடுத்துக்கொண்டேயிரு" என்று மனமுருக பிரார்த்தித்தார்.

(தொடரும்)

**சென்ற மாத நாமத்வார் செய்திகள்**



**ஏப்ரல்3–9 –ஸ்ரீபெரும்புதூர் நாமத்வாரின்** முதல் வருட பூர்த்தியை ஒட்டி, அங்கு, சென்னை நாமத்வாரை சேர்ந்த திரு.கேசவன் ஸ்ரீராமனுஜரின் சரித்திரத்தை ஏழு நாட்கள் எடுத்துரைத்தார்.



**ஏப்ரல் 3–11வரை –குரோம்பேட்டை ஸ்ரீவிபூதிபாபா** அவர்களின் சன்னதியில் திரு.வல்லபதாஸ், பல அன்பர்கள் முன்னிலையில், ராமாயணசரித்திரத்தை நவாஹமாக உபன்யாசம் செய்தார்.



## மாலே மணிவண்ணா – 84

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

சென்ற இதழ் கட்டுரையில் ஆழ்வார் திருமாலை அனுபவித்த பாசுரத்தை பார்த்தோம்.

"ஒளிமணிவண்ணன் என்கோ ஒருவன் என்று ஏத்த நின்ற
நளிர் மதிச்சடையன் என்கோ நான்முகக்கடவுள் என்கோ"

என்று மூவரையும் எடுத்து சொல்லி, எம்மான் கண்ணன் மாயன், மூவருமாக இருக்கிறான் என்று சொல்கிற ஆழ்வார், "ஒருவன் என்று ஏத்த நின்ற நளிர்மதிச்சடையன்" என்று சிவபிரானைச்சொல்கிறபோது, தனித்தன்மையோடு அவரை உலகம் துதிக்கின்றது என்று கூறியிருப்பது, சிந்தித்தற்குரியது அல்லவா? இப்படி ஆழ்வாராலும் ஒருவன் என்று ஏத்த நின்ற, நளிர் மதிச்சடையனை வழிபடும் சைவர்கள், "விஷ்ணு பரத்வத்தை பற்றி பரிபாடலும் ஆழ்வாராதிகளும் சொல்லுமாறு போல சொல்வாராயின், அது உண்மைக்கூற்றாகும்" என்று கட்டுரையை படிப்பார் எண்ணுவது எனக்கு தோன்றுகிறது. அந்த வகையிலும் சில அருளிச்செயல்களை பார்க்கலாம்.

திருமாலை பற்றி பேசும் பரிபாடலும், திருமாலையே முழுமுதற்கடவுளாக வழிபடும் வைணவ நெறியை சார்ந்த ஆழ்வாராதிகளும், திருமாலே என்று சொல்வதில் வியப்பில்லை. ஆனால் திருமாலை மூவரில் ஒருவராக ஏற்றுக்கொள்ள தயங்குகிற சைவர்களும், திருமாலை எல்லாமாகப் பார்க்கிற பார்வையை இனிப் பார்க்கலாம்.

மண் புகுந்தும், விண்பறந்தும், மாலும் அயனும் காணா ஒண்பொருளாகச் சோதிப்பிழம்பாக நின்ற எம்பெருமான் அண்ணாமலையார். அந்த பெருமானது திருவருளை முழுமையாக பெற்று அப்பெருமான் திருநாமத்தையே தமது பெயராக கொண்டவர் அருணகிரிநாதர். சைவசமயசரபம் என்னும்

உரைநடைநூலில் ஆணித்தரமாக விஷ்ணுபரத்வத்தை மறுத்து வாதம் செய்த ஸ்ரீமத்பாம்பன்குமரகுருதாசஸ்வாமிகள் தம்முடைய 6666பாடல்களில் பாட்டுக்கு பாட்டு தம் குருநாதராக வழிபடுகிற பெருமைக்குரியவர் அருணகிரிநாதர்.

கௌதம கோத்திரத்தை சேர்ந்த அந்தணரான ஸ்ரீ இராமநாதர், அபிராமிஅம்பிகை ஆகிய தம்பதிகளுக்குத் திருமகனாக திருவண்ணாமலைப் பிரதேசத்தை சார்ந்த முள்ளண்டிபுரம் என்னும் இடத்தில் அவதரித்த ஞானச்செல்வர் அருணகிரியார். தன்னுடைய தாய்மாமனாகிய சோமநாதரிடம் வளர்ந்தவர். திருப்புகழில் சோமநாதரை பற்றி அவரே கூறுகிறார்.

> *விஷ்ணுபரத்வத்தை மறுத்து வாதம் செய்த ஸ்ரீமத்பாம்பன்குமரகுருதாசஸ்வாமிகளின் ஆச்சார்யராக விளங்கும் அருணகிரிப் பெருமான் "திருமாலே எல்லாம் என்று சொல்வாராயின்" பரிபாடல் சொல்வதில் வியப்பில்லை அல்லவா?*

"அரிவை ஒரு பாகமான அருணகிரிநாதர் பூசை
அடைவு தவறாது வேணும் அறிவாளன்
அமணர் குல காலனாகும் அரிய தவராஜராஜன்
அவனி புகழ் சோமநாதன் மடம் மேவும்"

என்று இடையறாது தன் திருமடத்தில் "அருணகிரிநாதர்" பூசையை செய்து வருகின்ற தம் தாய்மாமனாகிய சோமநாதரிடத்தில் வளர்ந்து சகல சாஸ்திரங்களிலும் விற்பன்னராக திகழ்ந்தவர் அருணகிரிநாதர்.

"பூர்வ உத்தர பச்சிம தெட்சிண திக்குள பக்தர்கள் அற்புதம் என ஓத
சித்ர கவித்துவ சத்த மிகுத்த திருப்புகழ்"

பதினாறாயிரம் பாடிய பேரருளாளராகிய அனுபூதி செல்வர் அருணகிரியார். திருமாலின் திரு அவதாரச்செய்திகளை எல்லாம்




பாகவத இராமாயண மகாபாரதத்தினும் அழகாக எடுத்து சொல்லி, அந்தத்திருமாலின் மருகோனே என்றுதாம் வழிபடு தெய்வமாம் முருகனைத் திருப்புகழில் போற்றுவார்.

அத்தகைய அத்தியாச்சிரம சுத்தாத்துவித சைவை சித்தாந்த ஞானபானுவாகிய ஸ்ரீமத்பாம்பன் குமரகுருதாசஸ்வாமிகளின் வழிபாட்டுக்குற்குரிய ஆச்சார்யராக விளங்கும் அருணகிரிப்பெருமான், திருமாலே எல்லாம் என்று சொல்வாராயின், பரிபாடல் சொல்வதில் வியப்பில்லை அல்லவா? கி.பி.முதலாம் நூற்றாண்டை சேர்ந்த பரிபாடல் நெறி 14-ஆம் நூற்றாண்டை சார்ந்த அருணகிரிநாதர் திருப்புகழில் மலர்ந்து மணம் வீசுவதை அறிந்து மகிழலாம்.

(தொடரும்)

## சனாதனப் புதிர் : பகுதி – 14 விடைகள்

–ஆத்ரேயன்



1. 15 நாட்கள். அஸ்வசேனன், மயன், 4 சார்ங்க பட்சிகள் - மொத்தம் அறுவர் தப்பினர்.
2. இந்திரன்; ராமருக்கு - ராவணனுடன் யுத்தம் செய்யும்பொழுது; அர்ஜுனன் - இந்திரலோகம் சென்றபொழுது;
3. சுதர்மா, குணகேசி
4. துருபத ராஜனின் மகன். துரோணரால் கொல்லப்பட்டான்.
5. பகவான் கிருஷ்ணனுடைய குதிரைகளில் ஒன்று.
6. நகுலன் , கரேணுமதி இவர்களது புதல்வன் - மற்றொருவர் திரிகர்த்தா இளவரசன். சஹாதேவனால் கொல்லப்படுகிறார்.
7. ப்ருகுவின் மனைவி - ச்யவனர் - பிள்ளை
8. வார்ஷ்ணேயன் - அயோத்தி ராஜா ருதுபர்ணனிடம் சாரதியாக வேலைக்கு சேர்கிறார்.
9. 17மாதங்களில். சுதர்மா என்று சொல்லப்படும் பகவான் கிருஷ்ணனின் அரண்மனையை மிஞ்சுவதாக இருந்தது.
10. சுப்ரபா - புஷ்கர்; காஞ்சனாக்ஷி - நைமிசாரண்யம்; விசாலா - கயா; மனோரமா - உத்தரகோசலம்; ஓகவதி - குருக்ஷேத்திரம்; ஸுரேண்யு - கங்காத்வார்; விமலோதா - ஹிமவத்

**அக்ஷரமணமாலை** (ஸ்ரீஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து-169)

மீகாமனில்லாமன் மாகாற் றலைகல
மாகாமற் காத்தருளருணாசலா

பழங்காலத்தில் காடு என்பது மிகவும் அடர்ந்ததாக, பயங்கரமாக இருக்கும். ஓரிடத்தில் உள்ளே சென்றால், மறுபடி வெளியே வர வழி தெரியாது. அதனால் சம்சாரத்தை காடு என்று பலர் பாடியுள்ளனர்.

சம்சாரத்தை சாகரம் (கடல்) என்றும் சொல்லி உள்ளனர். கடல் உப்பு கரிக்கிறது. அதுபோல் இந்த சம்சார வாழ்வில் சாரம் என ஒன்றும் இல்லை. கடலில் திமிங்கிலம் போன்ற அபாயமான ஜந்துக்கள் உண்டு. அதுபோல் உலக வாழ்வும் ஆபத்துக்கள் நிறைந்தது. கடலில் அபூர்வமாய் முத்து போன்றதொன்று கிடைக்கிறது. அதுபோல் உலகிலும் அவ்வப்பொழுது இன்ப அனுபவம் கிடைக்கிறது. கடலின் ஒரு கரையில் நின்று பார்த்தால் மறு கரை தெரியவே தெரியாது. அதுபோல்தான் சம்சார வாழ்வும். கடலை தாண்டுவதற்கு கப்பல் வேண்டும், சரியாக செலுத்துபவன் வேண்டும்.

மாலுமி சரியானவராக இருந்தால்தான் நாம் கரையேற முடியும். மாலுமிக்கு ஒன்றும் தெரியாவிட்டால் கப்பல் கவிழ்ந்து விடும். அதுமட்டுமல்லாமல் நாமும் மாலுமியும் கவிழ்வோம். அதுபோலவே சரியான குருவை அடையாத ஒருவனின் கதி அதோகதிதான். அவனுடைய குருவும் கவிழ்வார். ஆகையால் குருவை தேர்ந்தெடுப்பதில் ஜாக்கிரதையாக இருப்பது அவசியம்.

உலக சம்பவங்கள் ஒரு சாதகரை பாதிக்கலாகாது. உலகிலுள்ளோரின் குற்றங்களை பார்ப்பது மிக தவறு. பிறர் குற்றங்களை பார்ப்பது கூட ஒரு வாசனையாக மாறி சாதகரின் மனதை கவிழ்த்து விடும். ஆதலின், கூடிய அளவிற்கு ஏகாந்தத்தை நாடுவதே நலம்.

இங்கு, கடலே சம்சாரம், கப்பல்தான் இந்த பிறப்பு. (இதைத்தான் "அலைகலம்" என இங்கு சொல்லி இருக்கிறது). கப்பலை சரியாக செலுத்தக்கூடிய மாலுமியே குருநாதர். அடிக்கும் காற்றே ப்ராரப்தம். காற்றையே மாலுமி அனுகூலமாக செய்வது போல், ப்ராரப்தத்தை குருவானவர் சீடனுக்கு சாதகமாக மாற்றி கொடுத்து விடுவார். உலகில் துக்கம் சம்பவிப்பது வைராக்கியம் வருவதற்குத்தான். பட்டினத்தார் போன்ற மஹான்கள் துக்கத்தை அதிகம் பாடுவதன் காரணம் , விரக்தி வந்தால்தான் மனது உண்முகப்பட்டு சொரூப சாக்ஷாத்காரத்தை தேடும்



என்பதினால்தான். துக்கத்தை ஈஸ்வரன் தருவது இந்த காரணத்திற்காகத்தான். இப்பாடலில், காற்றினால் (மீகாமன்)மாலுமியில்லாத கப்பல் எங்ஙனம் அலைக்கழிக்கப்படுமோ, அங்ஙனம், "நான் பிராரப்தத்தினால் துன்புறாது கரையேறும் பொருட்டு, உனது சொரூப சாக்ஷாத்காரத்தை தந்தருள் அருணாசலா" என பிரார்த்திக்கிறார் ரமண மஹரிஷிகள். (தொடரும்)

Madhuramurali

- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

மதுரமுரளி சந்தாதாரர்கள் ஆக விரும்புகிறவர்கள்
Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை/ டி.டி./ மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். PH:+914424895875

| ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள் | |
|---|---|
| மே 11, 24, ஜூன் 8 | ஏகாதசி |
| மே 16 | மயிலை சமஸ்கிருத கல்லூரியில் உபன்யாசம் |
| மே 18 | தாமரைப்பாக்கம் |
| மே 19-28 | வசந்தோத்ஸவம் |
| மே 27 | பராங்குசபுரம் - உபன்யாசம் |
| ஏப்ரல் 28 முதல் ஜூன் 14வரையில் | சென்னை ப்ரேமிக பவனத்தில் காலை 6மணி முதல் மாலை 6மணி வரை தினமும் "யோகிராம்சுரத்குமார்" அகண்ட நாமகீர்த்தனம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875,
Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.